செ.வெ.எண்.49 நாள் : 24.03.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ன்போது வாக்காளர்கள் அனைவருக்கும் புகைப்படவாக்காளர் சீட்டுக்கு (பூத் சிலிப்) பதிலாகவாக்காளர் தகவல் சீட்டு வழங்க தலைமை தேர்தல் அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதன்பேரில், ஏப்ரல்-6 அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலுக்காக வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்படவுள்ளது. வாக்காளர் தகவல் சீட்டில் வாக்குச்சாவடி விபரம், வாக்குபதிவு நாள், வாக்குபதிவு நேரம் ஆகிய விவரங்கள் இடம் பெற்றிருக்கும். வாக்குப்பதிவு நாளான 06.04.2021 அன்றைய தினத்திற்கு 5 நாட்களுக்கு முன்னர் வாக்காளர் தகவல் சீட்டு அனைத்து வாக்காளர்களுக்கும் வழங்கப்பட்டு விடும். சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர் தகவல் சீட்டு மட்டுமே போதுமான ஆவணம் அல்ல.

எனவே வாக்காளர் அடையாள அட்டை அல்லுத தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 11 ஆவணங்களில் ஒன்றான கடவுச்சீட்டு, ஓட்டுனர் உரிமம், மத்திய, மாநில அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணியாளர் அடையாள அட்டை, வங்கி அல்லது அஞ்சலக மேலாளரால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம், பான் கார்டு, மக்கள் தொகை கணக்கெடுப்பில் வழங்கப்பட்ட நேர்த்தி அட்டை, ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அடையாள அட்டை, மருத்துவ காப்பீடு அட்டை, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை காண்பித்து வாக்குப்பதிவு செய்யலாம் என அரியலூர் மாவட்ட வாக்காளர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**